புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மார்ச் 28, 2024 • புரட்சி 24 • முழக்கம் 11 • விலை ரூ.3.00

# டி.எம்.கிருஷ்ணாவின் கலகக்குரல் ஓங்கி ஒலிக்கட்டும்

கர்நாடக இசைக் கலைஞரான டி.எம். கிருஷ்ணாவுக்கு ‘சங்கீத கலாநிதி’ பட்டம் வழங்குவதாக மியூசிக் அகாடெமி அறிவித்தவுடன்இரண்டு பெண் பார்ப்பன கர்நாடக இசைக் கலைஞர்கள் பொங்கி எழுந்துவிட்டார்கள். மியூசிக் அகாடெமி சங்கராச்சாரிகளை எதிர்க்கும் டி.எம். கிருஷ்ணாவுக்கு எப்படி விருது வழங்கலாம் என்று மியூசிக் அகாடெமியின் தலைவர் முரளி அவர்களுக்கு கடிதம் எழுதியிருப்பதோடு டி.எம். கிருஷ்ணா தலைமை தாங்கும் இசை மாநாட்டை தாங்கள் புறக்கணிக்கப்போவதாகவும் அறிவித்து ள்ளனர். அகாடெமியின் தலைவருக்கு அவர்கள் எழுதிய கடிதத்தை முகநூலிலும் வெளியிட்டுள்ளனர்.

இதற்கு அகாடெமியின் தலைவர் முரளி, நாங்கள் விருது வழங்குவதற்கு ஒருவரது இசைத் திறமையைத் தான் மதிப்பிடுகிறோமே தவிர அவர் எந்த கருத்தைக் கொண்டிருக்கிறார் என்பதின் அடிப்படையில் அல்ல என்று பதிலடி கொடுத்துள்ளார். எனக்கு எழுதியுள்ள கடிதத்தை எப்படி முகநூலில் வெளியிட்டீர்கள். உங்களுடைய கருத்தை ஏற்றுக் கொண்டு மியூசிக் அகாடெமி தன்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ளாது என்று திட்டவட்டமாக மறுத்துள்ளார் அகாடெமியின் தலைவர் முரளி. இதற்காக நாம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

நந்தினி – காயத்ரி என்ற இந்த இரண்டு பார்ப்பன பெண்களும், பெரியார் பிராமணர்களை இனப்படுகொலை செய்யச் சொன்னார். பிராமணப் பெண்களை கொச்சையாக பேசினார் என்ற உண்மைக்கு புறம்பான கருத்துகளை பேசிவருகின்றனர். பெரியார் மிகச்சிறந்த மனிதநேயக் காவலர். அவர் பார்ப்பனியத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் எதிர்த்தாரே தவிர எந்தவொரு பார்ப்பனர்கள் மீதும் தாக்குதலும் கலவரமும் நடத்தியதாக சரித்திரம் கிடையாது. தமிழ்நாட்டின் வரலாற்றைப் புரிந்துகொண்டவர்கள் இந்த உண்மையை நன்கு அறிவார்கள்.

காயத்ரி – நந்தினி ஆகியோரின் எதிர்ப்பைத் தொடர்ந்து சங்கீத கலாநிதி விருது பெற்ற டி.எம்.கிருஷ்ணாவுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது வாழ்த்துகளை தெரிவித்ததுடன், பெரியார் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளுக்கும் அவர் பதிலளித்துள்ளார். அதனைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சித் தலைவர்



செல்வப்பெருந்தகை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு ஆதரவாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

பார்ப்பனர்கள் தங்களுக்கான எதிர்ப்பை தாங்களே தேடிக்கொள்கிறார்கள். காலத்தின் மாறுதலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை என்பதை அவ்வப்போது இப்படியான கருத்துக்கள் மூலமாக வெட்ட வெளிச்சமாகிறது. சித்திர வீணை இசைக் கலைஞரான ரவிக்கிரன், டி.எம்.கிருஷ்ணாவை எதிர்த்து மியூசிக் அகாடெமி தனக்கு வழங்கிய விருதை திருப்பியளிப்பதாக அறிவித்துள்ளார். ஹரி கதை காலட்சேபகர் துஸ்யந்த் ஸ்ரீதர் என்பவர் தர்மம், அயோத்தியா, ஸ்ரீ ராம பகவான் குறித்து டி.எம்.கிருஷ்ணாவின் கருத்துக்களால் நான் மிகவும் துயரமடைந்துள்ளேன் என்று கூறியதோடு பரமாச்சரியாருக்கும், சங்கீத ஆத்மாவுக்கும் இது எதிரானது என்று கூறியுள்ளார்.

காலமெல்லாம் பெண்களின் விடுதலைக்காக போராடிய தலைவர் பெரியார். அவரின் பெண் விடுதலைப் போராட்டம் என்பது அனைத்து பெண்களுக்குமானதே தவிர ஒருநாளும் ‘பிராமணப்’ பெண்களை தவிர்த்துவிட்டு அவர் போராடியதும் இல்லை, பேசியதும் இல்லை. பெரியார் நடத்திய போராட்டங்களின் விளைவாகத்தான் இன்றைக்கு பார்ப்பன சமுதாயத்தில் விதவைக் கோலங்களை காண முடிவதில்லை. மொட்டை அடித்து, காவி உடைப் போர்த்தி அவர்களை வீட்டிற்குள் முடக்கிவைக்கும் வழக்கமும் இப்போது இல்லை. பெரியாரின் பெண்ணுரிமைப் போராட்டங்களால் மிகப்பெரிய பயனை அடைந்த சமுதாயம் பார்ப்பன பெண்கள் என்பது தான் உண்மையான வரலாறு.

ஆனால் இசை நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு பெண்கள் செல்லக்கூடாது என்கிறது மனுசாஸ்திரம். வேலைக்கு செல்லும் பெண்கள் ஒழுக்கமாக இருக்க முடியாது என்று கூறியவர் தான் சங்கராச்சாரி. மேடையில் பக்கவாத்திய இசைக் கலைஞர்களாக பெண்கள் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை பல பார்ப்பன சங்கீத வித்துவான்கள் மறுத்ததும் உண்டு. பெரியாரின் ‘குடிஅரசு’ பத்திரிகை (20.04.1930) ஒரு செய்தியை பதிவு செய்திருக்கிறது.

மேடையில் இசை நிகழ்ச்சி நடத்தும் பார்ப்பனரல்லாத பெண்கள், சபைக்கு ஒவ்வொரு நபர்கள் வரும்போதெல்லாம் எழுந்து நின்று வணங்க வேண்டும். பிறகு அமர்ந்து பாட வேண்டும் என்ற நிலை நீடித்துவருகிறது. இது மிகப்பெரிய அவமானம் என்று எழுதிய பெரியார், சுயமரியாதை மாநாட்டோடு தமிழ் இசைக்கான மாநாட்டையும் சேர்த்து நடத்தினார் பெரியார். திருவையாறு தியாகராயர் உற்சவத்தில் தண்டபாணி தேசிகர் தமிழில் பாடினார் என்பதற்காக மேடை தீட்டாகிவிட்டது என்று கூறி மேடையில் தீட்டுக்கழித்தவர்கள் பார்ப்பனர்கள். இதைக் கண்டித்து அன்றைக்கு கலைஞர் குடிஅரசு ஏட்டில் எழுதியுள்ளார்.

டி.எம்.கிருஷ்ணாவும் பிறப்பால் ஒரு பார்ப்பனர் தான். ஆனால் அவர் பார்ப்பனியத்தை நோக்கி கேள்வி கேட்கிறார். இப்படி பார்ப்பனியத்தை எதிர்த்து கலகம் செய்யும் பார்ப்பனர்கள் வரலாற்றில் எப்போதாவது அபூர்வமாகத்தான் தோன்றுகிறார்கள். அதில் டி.எம்.கிருஷ்ணாவும் இருக்கிறார் என்பது வரவேற்க கூடிய ஒன்றாகும். டி.எம்.கிருஷ்ணா மீது இவர்கள் ஏன் இவ்வளவு வெறுப்பைக் காட்டுகிறார்கள்?. அப்படி அவர் என்ன குற்றத்தை செய்தார்?. கர்நாடக இசையை குடிசை வாழ் மக்களிடம் கொண்டு சென்றார். அந்த இசை மேல்தட்டு மக்களுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல என்பதை அழுத்தமாக பதிவு செய்தார். அவர் தனது ‘செபஸ்டியான் அண்ட் சன்ஸ்’ என்ற நூலில் மிருதங்கம் பசு மாட்டுத் தோலில் செய்யப்படுவதை சுட்டிக்காட்டினார். பசுவைப் புனிதமாக போற்றும் பார்ப்பன மிருதங்க வித்துவான்கள் இதை எப்படி வாசிக்கலாம் என்ற கேள்வியையும் எழுப்பினார் டி.எம்.கிருஷ்ணா.

பார்ப்பன மூத்த மிருதங்க வித்துவான் பாலக்காடு மணி அய்யர், இது குறித்து சங்கராச்சாரியிடம் விளக்கம் கேட்ட போது அது ஒன்றும் பாவமில்லை என்று அவர் கூறியதாக அந்நூலில் அவர் அம்பலப்படுத்தியிருந்தார். பசுவைப் புனிதம் என்று பேசுகிறவர்கள், தங்கள் தொழிலுக்கு பசுத் தோலைப் பயன்படுத்துவது பாவமில்லை என்பது தான் பார்ப்பனியத்தின் அணுகுமுறை ஆகும். பெரியார் – அண்ணா – இயேசு உள்ளிட்டோரை புகழ்ந்து டி.எம். கிருஷ்ணா கர்நாடக இசையில் பாடினார். இதை சனாதன கலாச்சாரம் ஏற்க மறுக்கிறது.

விருது பெறுவதற்கு முன் நிபந்தனை சங்கராச்சாரி ஆதரவும், பெரியார் எதிர்ப்பும் என்று சொன்னால் இவர்களை விட இனவாதிகள் வேறுயாரும் இருக்க முடியாது. எம்.எஸ்.சுப்புலட்சுமியிடம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை தமிழ்நாடு அரசுக்காக பாடித்தருமாறு கலைஞர் விடுத்த வேண்டுகோளை ஏற்க மறுத்தவர் எம்.எஸ்.சுப்புலட்சுமி. ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் பிறந்து ஒரு பார்ப்பனரை திருமணம் செய்து கொண்டு தன்னை பார்ப்பனியத்தில் மூழ்கடித்துக் கொண்டவர் எம்.எஸ்.சுப்புலட்சுமி. எனவே பார்ப்பனியம் எம்.எஸ்.சுப்புலட்சுமியை அங்கீகரித்துக் கொண்டது. ஆனால் பிறப்பால் ‘பிராமணராக’ இருந்தாலும், பார்ப்பன எதிர்ப்போடு துணிந்து வெளியே வந்திருக்கிறார் டி.எம்.கிருஷ்ணா. டி.எம்.கிருஷ்ணாவின் இந்த கலகக் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். அதற்கான அவரின் அழுத்தமானப் போராட்டத்திற்கு நாம் அனைவரும் ஆதரவுக் கரம் நீட்டுவோம்.

## ஜாதிவெறியோடு பேசிய நாமக்கல் வேட்பாளரை கண்டித்து கழக செயலவை தீர்மானம்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயலவைக் கூட்டம் 21.03.2024 வியாழக்கிழமை அன்று ஈரோடு பவானி சாலையில் உள்ள கே.கே.எஸ்.கே மஹாலில் நடைபெற்றது.

செயலவை கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் தலைமை தாங்கினார்.

கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம. இளங்கோவன் அறிமுக உரையாற்றினர்.

தொடர்ந்து கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் காணொளி வாயிலாக சென்னையில் இருந்து கூடியிருந்த தோழர்கள் மத்தியில் நேரலையில் உரையாற்றினார். அவர் தனது உரையில் கழகம் கடந்து வந்த பாதை, ஆற்றிய பணிகள், நம் முன் இருக்கும் சவால்கள், பரப்புரையில் புதிய யுக்திகளை கடைபிடிக்க வேண்டிய அவசியம், சமூக வலைதள பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து விரிவாக உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து கழக மாநில பொறுப்பாளர்கள், மாவட்ட, மாநகர பொறுப்பாளர்கள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகரும் பாஜக அரசை வீழ்த்த வேண்டிய அவசியம் குறித்தும், திமுக கூட்டணியை ஆதரித்து தாங்கள் செய்த பரப்புரைகள் குறித்தும், அதில் ஏற்பட்ட அனுபவங்கள் குறித்தும் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் திமுக

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

தலையங்கம்

# பதற்றத்தில் பாரதிய ஜனதா கட்சி!

டெல்லி மதுபான கொள்கை ஊழல் வழக்கில் மணீஷ் சிசோடியா, சஞ்சய் சிங், தெலங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவின் மகள் கவிதா ஆகியோரைத் தொடர்ந்து டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலும் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டிருக்கிறார். தேர்தல் சமயத்தில் நடந்திருக்கும் இக்கைது வடமாநிலங்களில் பாஜகவுக்கு அரசியல் ரீதியாக நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரென் கைது செய்யப்பட்டிருக்கிறார். எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அமைச்சர்கள், எதிர்க்கட்சி நிர்வாகிகள் இதுபோன்ற கைது நடவடிக்கைகளுக்கு ஆளாகியுள்ளனர்.

எதிர்க்கட்சிகளை அரசியல் ரீதியாகப் பழிவாங்க இத்தகைய கைதுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற விமர்சனம் இதுவரை இந்திய அளவில் மட்டுமே எதிரொலித்துக் கொண்டிருந்தது. இப்போது அரவிந்த் கெஜ்ரிவால் கைதால் இது சர்வதேச விவாதமாகியிருக்கிறது. அரவிந்த் கெஜ்ரிவாலின் கைது குறித்து என்ன நினைக்கிறீர்கள் என ஜெர்மனி வெளியுறவு அமைச்சரின் செய்தித் தொடர்பாளர் செபாஸ்டியன் பிஷ்ஷரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

“இந்த வழக்கை கவனத்தில் எடுத்துள்ளோம். இந்தியா ஒரு ஜனநாயக நாடு. நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் அடிப்படை ஜனநாயகக் கோட்பாடுகள் இந்த வழக்குக்கு பொருந்தும் என்று நாங்கள் கருதுகிறோம், எதிர்பார்க்கிறோம்.” என்று அவர் பதிலளித்திருக்கிறார். வழக்கு நியாயமாக விசாரிக்கப்பட வேண்டுமென்று அவர் கூறியதற்கே, ஒன்றிய அரசு அதிர்ந்து போயிருக்கிறது. ஜெர்மனி தூதரை உடனே அழைத்து கண்டனம் தெரிவித்திருக்கிறது.

ஆனால் ஜெர்மனியைத் தொடர்ந்து அமெரிக்காவும் இப்போது அரவிந்த் கெஜ்ரிவல் கைது குறித்து கருத்து தெரிவித்திருக்கிறது. நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய விசராணை நடத்தப்பட வேண்டுமென்று அமெரிக்கா கூறியிருக்கிறது. ஆனால் இதுவரை அமெரிக்காவுக்கு இந்திய வெளியுறவுத்துறை எவ்விதமான கண்டனமும் தெரிவிக்கவில்லை.

அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதற்கு முகாந்திரம் இருக்கிறது என்றால், இதே வழக்கில் தொடர்புடைய அரபிந்தோ பார்மா நிறுவனத்தின் நிர்வாகி சரத் சந்திர ரெட்டி 35 கோடி ரூபாய்க்கும் மேல் பாஜகவுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை கொடுத்துள்ளார். இந்த வழக்கில் இவர் கைது செய்யப்பட்ட பிறகே பெரும்பாலான நன்கொடை வழங்கப்பட்டிருக்கிறது. பிறகு இவர் அப்ரூவராக மாறி ஜாமினும் பெற்றுள்ளார். ஆக, இந்த வழக்கில் அமலாக்கத்துறை நியாயமான விசாரணை நடத்திட, பாஜகவின் நன்கொடையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால் இதுவரை அமலாக்கத்துறை அத்தகைய முயற்சிகளில் ஈடுபடவில்லை என்பதில் இருந்து, இந்த கைது முழுக்க அரசியல் ரீதியாக நடந்திருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் வடகிழக்கு மாநிலங்களில் நிலவும் அமைதியற்ற சூழலால் பல தொகுதிகளில் பாஜக போட்டியில் இருந்து விலகிக்கொண்டு கூட்டணிக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்திருக்கிறது. மகாராஷ்டிராவில் சிவசேனா– தேசியவாத காங்கிரஸ் கட்சிகளை உடைத்த பின்பும் கூட இந்தியா கூட்டணி மிக வலுவாக இருக்கிறது. பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளம்–காங்கிரஸ் கூட்டணி வலுவாக இருக்கிறது. தென்மாநிலங்களில் பாஜகவுக்கு எவ்விதமான செல்வாக்கும் இல்லை. எஞ்சியிருக்கும் வடமாநிலங்களிலும் விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை பிரச்னைகள் மைய விவாதப் பொருளாக மாறியிருக்கின்றன. பாஜகவுக்கு சாதகமான அலை ஒரு மாநிலத்தில் கூட வீசவில்லை என்பதுதான் கள எதார்த்தமாக இருக்கிறது.

இதை பாஜகவினரும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அதனால் சிலர் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும் முன்பே, தாங்கள் இம்முறை போட்டியிட விரும்பவில்லை என தலைமைக்கு கடிதம் அனுப்பிவிட்டார்கள். குஜராத்திலேயே 2 வேட்பாளர்கள் பின்வாங்கிவிட்டார்கள். தமிழ்நாட்டில் கூட நாமக்கல் தொகுதி பாஜக வேட்பாளர் கே.பி.ராமலிங்கம், “எனக்கு போட்டியிடும் எண்ணமில்லை, ஆனால் தலைமை அறிவித்துவிட்டது.” என்று புலம்பியிருக்கிறார். இத்தகைய விரக்தியில்தான் எதிர்க்கட்சிகள் மீது மிகத் தீவிரமான ஒடுக்குமுறையை பாஜக அரசு கையாண்டு வருகிறது என்பதை சாமானிய மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. அதன் உச்சபட்சமாகவே காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களை, பணத்தை முடக்கிவிட்டால், பாதி வெற்றி உறுதியாகிவிட்டது என்று கருதுகிறது பாஜக. ஆனால் 10 ஆண்டுகாலத்தில் பாஜகவால் மக்கள் இழந்த வாழ்வாதாரமே இம்முறை தேர்தல் களத்தில் முதன்மைச் சிக்கலாக இருக்கப் போகிறது. எத்தனை கைது செய்தாலும், எவ்வளவு பணத்தை முடக்கினாலும் பாஜகவால் இதை மாற்ற முடியாது.

## வினா விடை

- *கோவையில் 2 டிகிரி செல்சியஸ் அளவிற்கு வெப்பத்தை உயர்த்தியது தான் திராவிடக் கட்சிகளின் சாதனை – அண்ணாமலை பேச்சு*

அண்ணா, என்னை ஜெயிக்க வைங்க, அடுத்தநாளே இந்த கோவை தொகுதியை திராவிட இயக்கத்தின் துரோகத்தை முறியடித்து பூமியின் வெப்பத்தை குறைத்துக் காட்டுகிறேனா? இல்லையா? என்பதை மட்டும் பாருங்கள். உலகம் முழுவதும் பூமி வெப்பமானதுக்கு யார் காரணம், இந்த திராவிட கட்சிகள் அல்லவா, சவால் விடுகிறேன்.

- *எனக்கு கங்கை – கோதாவரி இணைப்பு தான் முக்கியம். கடவுள் என்னிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டால், நான் இதைத்தான் கேட்பேன் – மருத்துவர் இராமதாசு*

நீங்கள் பிரதமராக ஆக்கத் துடிக்கும் மோடி இதை செய்யமாட்டார் என்பதால் கடவுளிடம் போயிடீங்களா? ஓகோ நீங்களும் கடவுளிடம் கூட்டணி போடும் கட்சிகளிடம் சேர்ந்திட்டிங்க போல.

- *பௌர்ணமிக்குப் பிறகு நல்ல நேரம் 1 மணிக்குள் முடிவதால் வேட்புமனு தாக்கல் செய்வதில் கட்சிகளுக்கு இடையே கடும் போட்டி, மோதல் – செய்தி*

ஒரே தொகுதியில் தோற்கிறவர், வெற்றி பெறுகிறவர், டெபாசிட் பறிகொடுக்கிறவர், வெற்றிபெற்று கட்சி மாறுகிறவர்கள் எல்லோரும் அந்த நல்ல நேரத்தில் தான் மனு போடும் நல்லவர்களாகவே இருக்கிறார்கள்.

- *தேர்தல் பிரச்சாரம் தொடங்குவதற்கு முன்பு ஒவ்வொரு முறையும் வழிபடும் சென்றாய பெருமாள் கோயிலில் தரிசனம் செய்து பிரச்சாரத்தை தொடங்கினார் எடப்பாடி பழனிச்சாமி – செய்தி*

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் – சட்டமன்றத் தேர்தல் – உள்ளாட்சி தேர்தலில் சென்றாய பெருமாள் வழங்கிய தீர்ப்பை, இந்த தேர்தலிலும் வழங்கி எடப்பாடி பழனிச்சாமியின் தரிசனத்தை நிறைவேற்றுவாராக!

- *வேட்புமனு தாக்கலின் போது மாவட்ட ஆட்சியர் உறுதிமொழிப் படிவத்தை படிக்கச் சொன்ன போது எனக்கு தமிழ் வாசிக்கத் தெரியாது என்று விருதுநகர் தொகுதி நாம் தமிழர் வேட்பாளர் கூறியிருக்கிறார் – செய்தி*

அதனாலென்ன... என் அன்னை தமிழைப் பழிப்பவனை இந்த மண்ணில் வாழவிட மாட்டேன். நான் ஆட்சிக்கு வந்தால் நாடு கடத்த உத்தரவிடுவேன் என்று கையை உயர்த்தி உரத்தக் குரலில் மூச்சுமுட்ட பேசத் தெரிந்தால் போதும், நீங்களும் நாம் தமிழர் தான்.

- *எனது பையில் இருந்த வைரம் பதித்த ராசியான விலையுயர்ந்த பேனாவை காணவில்லை, யாராவது எடுத்திருந்தால் திருப்பிக் கொடுங்கள் – சிவகங்கை பாஜக வேட்பாளர் தேவநாதன் பிரச்சாரத்தில் பேச்சு*

ஓட்டு கேட்க போய் பேனாவை கேட்க ஆரம்பிச்சுட்டிங்களே, உங்க ராசி தொடக்க நாளிலே பறிபோய் விட்டது என்று கலங்கிடாதிங்க, அடிச்சு விளையாடுங்க..

- *சூரியவம்சம் படத்தில் தேவயானியை கலெக்டராக்கினேன், இப்போது எனது மனைவியை நாடாளுமன்ற உறுப்பினராக்குவேன் – சரத்குமார் பேச்சு*

அந்த படத்துக்கு தேர்தல் முடிந்த பிறகு பூஜை போடலாம் சார். படம் நல்லா வரனும்ல அவசரப்படாதிங்க..

முதல் பக்கத் தொடர்ச்சி



கூட்டணியை ஆதரிப்பதன் அவசியத்தை ஒட்டுமொத்தமாக செயலவையில் பேசிய நிர்வாகிகள் குறிப்பிட்டிருந்தாலும், சில தோழர்கள் திமுக கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் நாமக்கல் வேட்பாளர் சூரிய மூர்த்தியின் ஜாதி வெறி பேச்சை குறிப்பிட்டு அந்த வேட்பாளரை ஆதரிப்பதில் நமக்கு இருக்கும் சிக்கல்கள் குறித்தும் எடுத்துரைத்தார்கள்.

திமுக கூட்டணியை ஆதரிக்கும் அதே நேரத்தில் இந்த நாமக்கல் கூட்டணி கட்சி வேட்பாளரை மட்டும் ஆதரிப்பதை கழகத் தலைமை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்கள்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி செயலவையில் 2 தீர்மானங்களை தோழர்கள் மத்தியில் எடுத்துரைத்து விரிவாக பேசினார்.

தோழர்களின் ஒட்டுமொத்த கரவொலியுடன் இரண்டு தீர்மானங்களும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணியை ஆதரிப்பது என முதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது தீர்மானமாக நாமக்கல்லில் போட்டியிடும் திமுக கூட்டணி கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்ட ஜாதி வெறி பிடித்த வேட்பாளரை மாற்ற வேண்டும் என்றும் ஒருவேளை அந்த வேட்பாளர் மாற்றப்படாமல் அதே வேட்பாளர் போட்டியிடுவாரேயானால் நாமக்கல்லில் மட்டும் தேர்தலை புறக்கணிப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இரண்டு தீர்மானங்களையும் விளக்கி கழகத் தலைவர் அவர்கள் மிகவும் விரிவாக உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. அப்போது செய்தியாளர்களின் கேள்விகளுக்கு கழகத் தலைவர் பதிலளித்தார்.

செயலவை கூட்டம் துவங்குவதற்கு முன்பு காலையிலேயே செயலவை நடைபெற்ற ஈரோடு கே.கே.எஸ்.கே மகாலுக்கு காவல்துறை குவிக்கப்பட்டு தேர்தல் அதிகாரிகளும் நேரில் வந்து தேர்தல் நடைமுறை அமலுக்கு வந்து விட்டதால் செயலவை கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று எழுத்துப்பூர்வமாக கழக அமைப்புச் செயலாளரிடம் கடிதம் வழங்கினார்கள்.

ஆனாலும் கழகத் தலைவர் தேர்தலில் போட்டியிடாத எமது இயக்கத்திற்கு தேர்தல் நடைமுறைகள் பொருந்தாது என்று எடுத்துக் கூறினார். மேலும் திட்டமிட்டபடி இந்த செயலவை நடைபெறும் என்றும் கைது நடவடிக்கைக்கும் நாங்கள் தயார் என்றும் அறிவித்தார்.

தலைவரின் விளக்கத்தை ஏற்காது தேர்தல் அதிகாரிகள் கூடிய தோழர்கள் மீது தேர்தல் கால நடத்தை விதிகளின் கீழ் வழக்கை பதிவு செய்தார்கள்.

செயலவையில் நாமக்கல் வேட்பாளரை மாற்றக்கோரி தீர்மானம் நிறைவேற்றிய சில மணி நேரங்களில் கூட்டணி கட்சியின் வேட்பாளர் மாற்றப்பட்டார். எனவே நாமக்கல்லில் போட்டியிடும் மாற்றப்பட்ட கூட்டணி கட்சி வேட்பாளரை ஆதரித்து கழகம் அனைத்து தொகுதிகளைப் போல அந்தத் தொகுதியிலும் ஆதரவாக பரப்புரையிலும் வாக்கு செலுத்துவதிலும் ஈடுபடும்.



# விவாதத்தில் வெல்ல முடியாதவர் அண்ணா

கோவை மாவட்டக் கழக சார்பில் 02.03.2024 அன்று கோவை அண்ணாமலை அரங்கில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நினைவுநாள் கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை :- 14.03.2024 இதழின் தொடர்ச்சி...

**கொளத்தூர் மணி**



### கலை வடிவத்தை விரிவுபடுத்தினார்

அண்ணா சுயமரியாதை இயக்கத்தில் பணியாற்றியபோது பெரியாருக்கும், அவருக்கும் உண்டான மொழி நடை, உரை ஆகியவை வேறுபட்டிருந்தது. அண்ணாவின் வருகைக்கு பிறகு திராவிடர் கழகத்தில் கலை வடிவம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. திராவிட நடிகர் சங்கம், திராவிட நாடக சபை மூலமாக நாடகங்களை அரங்கேற்றினார்கள். அண்ணா எழுதிய சில முக்கியமான நூல்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம். இந்து ராஜ்ஜியம் அமைந்தால் என்ன பலன் ஏற்படும் என்பதுதான் அந்த நாடகத்தின் கரு. சிவாஜி பெரிய வீரன், மராட்டியத்தையே வெற்றிகொண்டான். ஜோதிபாபூலே போன்றோர் மராட்டியத்தின் அடையாளமாக சிவாஜியைப் போற்றினார்கள். சங் பரிவார கும்பல் இந்துக்களின் எழுச்சி சின்னமாக சிவாஜியை மாற்றிவிட்டனர். ஆனால் சிவாஜி தனது மெய்க்காப்பாளராக, தனித் தூதுவராக இரு இஸ்லாமியரைத்தான் வைத்திருந்தார். ஔரங்கசீப் மெய்க்காப்பாளராக, படைத்தளபதியாக ஒரு இந்துவைத்தான் வைத்திருந்தார். நீ என்ன வீரனாக இருந்தாலும் உன்னை பார்ப்பான் பணிய வைத்துவிடுவான். அப்படித்தான் இந்த மக்களை அவன் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறான் என்று அண்ணா எழுதினார்.

அந்த நாடகத்தில் சிவாஜி மன்னராக முடி சூடுகிறார். உடனே அங்கிருந்த பார்ப்பனர்கள் நீ சூத்திரன், ஆகையால் முடி சூட்டிக்கொள்ள முடியாது என்கிறார்கள். பின்னர் வாரணாசியில் உள்ள காகப்பட்டர் என்ற பார்ப்பனரை சந்தித்து பணம் அதிகமாக கொடுத்த பிறகு மன்னராக்கிவிட்டார்கள். இதுதான் அங்கு நடந்த கதை.

இதில் சந்திர மோகனாக வருபவர் சிவாஜியின் நண்பர். நீ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன், ஆகையால் பார்ப்பனர்களிடம் கேட்காமல் நீ ஆட்சியை நடத்து என்று அவ்வப்போது கூறுவார். இறுதியில் சந்திர மோகனை வீட்டை விட்டு துரத்திய பிறகு சிவாஜி சந்திர மோகனிடம், "நீ கூறுவதெல்லாம் சரிதான், இதை ஊருக்குள் இருக்கும் மக்களிடம் போய் சொல்" என்று அந்த நாடகம் நிறைவடையும்.

மற்றொன்று சந்திரோதயம், அது முழுவதும் பகுத்தறிவு பேசுகிற நாடகமாகத்தான் இருக்கும். அந்த நாடகம் தான் அப்போது நடந்த அனைத்து மாநாடுகளிலும் அரங்கேற்றப்பட்டது. அந்த நாடகத்தில் வரும் ஒரு காட்சி. வேலையாள் இரண்டு நாட்கள் விடுமுறைக்கு பிறகு மீண்டும் அரண்மனைக்கு வரும் போது, ஜமீன்தார் எங்கே போனீர்கள், இரண்டு நாட்களாக காணவில்லை என்று கேட்க? சிதம்பரம் ஆருத்ரா தரிசனத்திற்கு சென்றிருந்தேன் என்பார். அங்கு என்ன விஷேசம் என்று ஜமீன்தார் கேட்க, அங்கு நடராஜர் நடனமாடிக் கொண்டிருப்பார், பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருக்கும் என்றார் வேலையாள். உடனே ஜமீன்தார் அப்படியா? எப்படி இருந்தது என்பதை சற்று விளக்கு என்று கேட்டபோது, நடராஜர் மாதிரியே நின்று காட்டுவார். சிறிது நேரம் கழித்து எஜமான் கால் வலிக்குது என்பார் அந்த வேலையாள். எத்தனை ஆண்டுகாலம் நடராஜர் அப்படியே நிற்கிறார் என்று எஜமான் கேட்ட போது அது வெறும் கல் எஜமான், நான் மனிதன் என்று பதிலளிப்பார் வேலையாள். இதைத்தான் நானும் சொல்கிறேன் என்று எஜமான் சொல்வதுடன் அந்த நாடகம் நிறைவடையும். அப்படி அந்த நாடகம் முழுவதும் பகுத்தறிவைப் பரப்புகிற ஒரு நாடகமாகத்தான் இருக்கும்.

### விவாதத்துக்கு வல்லவர் அண்ணா

வர்ணாசிரமம், தேவ லீலைகள் என்ற நூல்களையும் எழுதியுள்ளார் அண்ணா. வர்ணாசிரமம் என்ற நூலில் பார்ப்பனர்களின் ஆட்சி, அவர்களது சூழ்ச்சிக்கு நாம் ஆளாகிவிட்டோம் என்று எழுதியிருப்பார். கம்பரசம் என்ற நூலையும் அவர் எழுதியுள்ளார். 1971இல் மாட்டுக்கறி - பன்றிக்கறி விருந்து என்று ஒன்றை பெரியார் அறிவித்தார். அதைப்போல பெரியபுராண - ராமாயண எரிப்புப் போராட்டத்தையும் அறிவித்தார் பெரியார். அப்போது கடும் எதிர்ப்பு வந்த போது அண்ணா வாதம் செய்ய தயாராக இருந்தார். இரண்டுமுறை விவாதம் நடைபெற்றது. சென்னையில் நடந்த விவாதத்தின் தலைவராக கோவையைச் சேர்ந்த ராமசந்திர செட்டியார் இருந்தார். அவர் கோவை கிழார் என்ற புனைப்பெயரில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அப்போது அண்ணாவை எதிர்த்துப் பேசியவர் தமிழ் பேராசிரியரான ரா.பி.சேதுப்பிள்ளை ஆவார்.

அடுத்து சேலத்தில் நடைபெற்ற விவாதத்தின் தலைவராக சேலம் கல்லூரி முதல்வர் ராமசாமி கவுண்டர் இருந்தார். அப்போது அண்ணாவுக்கும் சோம சுந்தர பாரதியாருக்கும் விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தின் இடையில் சோம சுந்தர பாரதியார் தொடர்வண்டிக்கு நேரமாகிவிட்டது என்பதால் பாதியிலே கிளம்பிவிட்டார். பின்னர் தலைவர் ராமசாமி கவுண்டர், சென்னையில் நடந்த

> **"ராமன் மறைந்திருந்து ஒரு குரங்கை கொன்றானே அவனுக்கு இரக்கம் இருந்ததா? என்று கேட்டதற்கு இல்லை என கம்பன் பதிலளிப்பான். பின்னர் ஏன் அவனை மட்டும் இரக்கமில்லாதவன் என்று எழுதவில்லை என்று இராவணன் கேட்பான்."**

விவாதத்தில் ராமசந்திர செட்டியார் எந்த தீர்ப்பையும் சொல்லவில்லை. அப்படி நான் தீர்ப்பு சொல்லாமல் இருக்க மாட்டேன். நான் சொல்கிறேன், "ராமாயணம் ஆபாசம் நிறைந்தது, அது அழிக்கப்பட வேண்டியது என்று தீர்ப்பு வழங்கினார்.

கம்பர் தனது பாடலின் முதல் வரியிலேயே "இந்த பாட்டை பாடினால் சமூகம் என்னை திட்டும், கேவலமாக பேசும்" என்பது எனக்கு தெரியும். இருந்தாலும் ஒரு தெய்வக் கவியின் பாட்டை தமிழில் மொழிப்பெயர்த்திருக்கிறேன் என்று சொல்லுவார். இதனை கம்பரே வருத்தப்பட்டுத்தான் எழுதியிருக்கிறார் என்று வேடிக்கையாக அண்ணா சொல்லுவார். அப்படிப்பட்ட சிந்தனைகளை உரைகளின் மூலமாக மட்டுமில்லாமல் நூல்களின் மூலமாகவும் வழங்கியுள்ளார் அண்ணா.

எல்லாவற்றையும் விட சிறப்பான ஒரு நூலாக நான் கருதுவது ஆரிய மாயை ஆகும். அந்த நூலில்

**பேராசைப் பெருந்தகையே போற்றி!**
**பேச நா இரண்டுடையாய் போற்றி!**
**தந்திர மூர்த்தி போற்றி!**
**தாசர் தம் தலைவா போற்றி!**
**வஞ்சக வேந்தே போற்றி!**
**வன்கண நாதா போற்றி!**
**கொடுமைக் குணாளா போற்றி!**

என்ற பாடலுடன் அந்த நூல் தொடங்கும். இதையெல்லாம் நான் சொல்லவில்லை, பிரெஞ்சுக்காரர் ஒருவர் இந்த நாட்டை பார்வையிட்ட பிறகு எழுதியது இது என்று அண்ணா எழுதுகிறார்.

'நீதிதேவன் மயக்கம்' என்ற இன்னொரு நூலையும் அண்ணா எழுதியுள்ளார். அந்த நூலில் ராவணன் தன்னை பற்றி அவதூறாக எழுதிய கம்பன் மீது வழக்கு தொடுப்பான். "இரக்கம் எனும் பொருளிலா அரக்கன்" என்று எழுதியுள்ளார். எனவே அதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்றார் இராவணன். அவனிடம் நான் ஏன் போய் பேச வேண்டும் என்று கம்பன் கேட்பார். உடனே உனக்கு சம்மன் வந்துள்ளது. ஒழுங்காக நீதிமன்றம் வந்துவிடு என்பார்கள்.

பின்னர் கம்பனிடம் ஒவ்வொரு கேள்வியாய் கேட்பார்கள், ராமன் மறைந்திருந்து ஒரு குரங்கை கொன்றானே அவனுக்கு இரக்கம் இருந்ததா? என்று கேட்டதற்கு இல்லை என கம்பன் பதிலளிப்பான். பின்னர் ஏன் அவனை மட்டும் இரக்கமில்லாதவன் என்று எழுதவில்லை என்று இராவனன் கேட்பான். நான் சீதையை கூட்டிவந்தேன், அவருக்கு எனது தம்பி மகளை காவலுக்கு வைத்திருந்தேன். சீதை என் மீது எதாவது குறை சொன்னாரா? பின்னர் ஏன் என்னை மட்டும் இரக்கமில்லாதவன் என்று எழுதி வைத்துள்ளீர் என்று கம்பனை நோக்கி கேள்விகளை அடுக்கினார் இராவணன். இறுதியில் இதை கவனித்த நீதிபதியே மயங்கிவிடுவார்.

### சுரண்டலை கடுமையாக எதிர்த்தவர்

'பணத்தோட்டம்' என்ற நூலில் வடவர்கள் எப்படி நம் பணத்தை சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெளிவாக விளக்கியிருப்பார். 1950இல் இட ஒதுக்கீடு செல்லாது என்று தீர்ப்பு வந்தபோது அதற்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்றது. அந்த போராட்டத்துடன் சேர்த்து வடவர் கடை மறியல் போராட்டம் என்பதையும் சேர்த்து நடத்தினார் பெரியார். சென்னையில் மட்டும் தொடர்ந்து நான்கு நாட்கள் இந்த போராட்டம் நடைபெற்றது. பின்னர் தமிழ்நாடு தழுவிய போராட்டமாக நடைபெற்றது.

இன்சூரன்ஸ் என்ற பெயரில் நம் பணத்தை எப்படி திருடுகிறார்கள். இந்தியாவில் உள்ள மொத்த இன்சூரன்ஸ் கம்பெனிகளின் எண்ணிக்கை 234. அதில் சென்னையில் நடத்துபவர்கள் 37 பேர், வடநாட்டுக்காரர்கள் 187 பேர் நடத்துகிறார்கள். இப்படி புள்ளிவிவரங்களுடன் எப்படியெல்லாம் நம்மை சுரண்டுகிறார்கள் என்பதை விளக்கியிருப்பார். திருமணம் என்ற நூலில் திருமணத்தில் பின்பற்றப்படும் மூடநம்பிக்கைகள் குறித்து விரிவாக எழுதியிருப்பார்.

### அண்ணாவின் ஒப்பில்லாத ஆட்சி

அண்ணா ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த உடனே இரு மொழிக் கொள்கை, சுயமரியாதைத் திருமண சட்ட அங்கீகாரம், தமிழ்நாடு பெயர் சூட்டல் உள்ளிட்டவைகளை விரைவாக செய்தார். இது குறித்து லிங்கம் என்பவர், மெட்ராசுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் என்ன கிடைத்துவிடப் போகிறது என்று கேட்டார். அதற்கு அண்ணா, பார்லிமெண்டுக்கு லோக்சபா என்று பெயர் வைத்தீர்களே, கவுன்சில் ஆஃப் ஸ்டேட்ஸ் என்பதற்கு ராஜ்யசபா என்று வைத்தீர்களே, அப்போது என்ன கிடைத்தது உங்களுக்கு. குடியரசுத் தலைவர் ராஷ்டிரபதியாகிவிட்டாரே, அதனால் உங்களுக்கு என்ன கிடைத்ததோ, அதேதான் எங்களுக்கும் என்று பதிலளித்தார்.

அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார். அந்த சுற்றறிக்கையில் இனிவரும் காலங்களில் யாரும் *Beg* மற்றும் *Obediantly* என்ற வார்த்தையை கடிதங்களில் பயன்படுத்தக் கூடாது, மாறாக *sincerely* என்று குறிப்பிட்டால் போதுமானது என்றார். ரகசிய பதிவேடு முறையை ரத்து செய்தவர் அண்ணா, இதன்மூலம் பார்ப்பனரல்லாதவர்களின் பதவி உயர்வு என்பது காப்பாற்றப்பட்டது. தனது இறுதிக்காலத்தில் 1969இல் மாநில சுயாட்சி குறித்து எழுதினார். இவையெல்லாம் சாதாரண சாதனையாக எண்ணிவிட முடியாது, சுயமரியாதை உள்ள ஒருவரால் தான் இப்படி யோசிக்க முடியும். அறிஞர் அண்ணா தனி மனிதரல்ல, அவர் விரிந்த அரசியல் சிந்தனையை கொண்டவர். அப்படிப்பட்ட அரசியல் புரிதலோடு நம் பணியாற்ற வேண்டும் என்பதை அண்ணாவின் நினைவுநாளில் எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

(நிறைவு)

தொகுப்பு : விஷ்ணு

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஊழலற்ற உத்தமக் கட்சியா பாஜக?

தேர்தல் பத்திரங்கள் என்ற மோசடித் திட்டத்தை உச்சநீதிமன்றம் ரத்து செய்து, ஒட்டுமொத்த விவரங்களையும் வெளியிட வேண்டுமென்று எஸ். பி.ஐ.-க்கு இட்ட உத்தரவால், மெகா ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்து ஆட்டம் கண்டிருக்கிறது பாரதிய ஜனதா கட்சி. பணம் கொடுக்காத நிறுவனங்களை அமலாக்கத்துறை, சிபிஐ, வருமான வரித்துறை போன்ற நிறுவனங்களை வைத்து மிரட்டுவதும், தாராளமாக நன்கொடைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் அள்ளிக் கொடுக்கப்பட்டிருப்பதும் அம்பலமாகியிருக்கிறது.

சிபிஐ, அமலாக்கத்துறை, வருமான வரித்துறையின் விசாரணை வளையத்தில் இருக்கிற 41 நிறுவனங்கள் 2,471 கோடி ரூபாயை பாஜகவுக்கு வழங்கியிருக்கின்றன. இதில் சோதனைக்கு பிறகு மட்டுமே 1,698 கோடி ரூபாயை தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடையாக வாரி வழங்கியிருக்கின்றன. 121 கோடி ரூபாய் சோதனை நடந்த 3 மாதங்களுக்குப் பிறகு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல 33 நிறுவனக் குழுமங்கள் 172 முக்கியமான திட்டங்கள் மற்றும் திட்ட அனுமதிகளை அரசிடம் இருந்து பெற்றிருக்கின்றன. இந்த திட்டங்கள் மட்டும் ஒப்பந்தங்களின் மதிப்பு 3.7 லட்சம் கோடி ரூபாய் - இந்த ஒப்பந்தங்களின் மதிப்பு 3.7 லட்சம் கோடி ரூபாய். இதற்கான பலாபலனாக இந்த 33 நிறுவனங்களும் தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜகவுக்கு அளித்த நன்கொடை 1,751 கோடி ரூபாய். ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வெளியிட்ட தேர்தல் பத்திர எண்களையும், பாஜக பெற்ற நன்கொடையையும் ஒப்பிட்டு இந்த விவரங்களை வெளியிட்டிருக்கிறார் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூசண்.

ஊழலற்ற கட்சி என தனக்குத்தானே முத்திரை குத்திக்கொண்டு, வரலாற்றில் வேறெந்த கட்சிகளும் செய்யாத அளவுக்கு சட்டப்பூர்வமாகவும், தொழில்நுட்பப் பூர்வமாகவும் மெகா ஊழல்களை பாஜக செய்து கொண்டிருப்பது இவற்றின் மூலம் உறுதியாகிறது. எனவே பாஜக பெற்ற நன்கொடை மற்றும் ஒன்றிய அரசிடம் இருந்து ஒப்பந்தங்கள் பெற்ற நிறுவனங்கள், சோதனைகளுக்குப் பிறகு நன்கொடைகளை வாரி வழங்கிய நிறுவனங்களை சுதந்திரமான அமைப்பைக் கொண்டு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

குறிப்பாக, ஹைதராபாத்தைச் சேர்ந்த நவயுகா இன்ஜினியரிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தில் 2018ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் தேதி வருமான வரித்துறை சோதனை நடத்தியது. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி இந்நிறுவனம் பாஜகவுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் 30 கோடி ரூபாய் நிதி கொடுத்திருக்கிறது. அதே ஆண்டு அக்டோபர் 10ஆம் தேதி மீண்டும் 10 கோடி ரூபாயை பாஜகவுக்கு கொடுத்திருக்கிறது. மீண்டும் 2022ஆம் ஆண்டு அக்டோபரில் 10 ரூபாய் என மொத்தம் 55 கோடி ரூபாயை பாஜகவுக்கு நன்கொடையாக கொடுத்திருக்கிறது இந்நிறுவனம்.

இதற்காக இந்நிறுவனத்திற்கு 2 பெரிய பரிசுகள் கிடைத்திருக்கின்றன. முதலாவது பரிசு, ரிஷிகேஷ்-கர்ணபிரயாக் ரயில் இணைப்புத் திட்ட ஒப்பந்தம். 2020-இல் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது. உத்தராகண்ட் மாநிலம் உத்தர்காசி மாவட்டத்தில் கட்டப்பட்டு வந்த சுரங்கப்பாதையில், கடந்த ஆண்டு நவம்பரில் நிலச்சரிவு ஏற்பட்டு 41 தொழிலாளர்கள் உள்ளே சிக்கிக் கொண்டனர். தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரிக் இயந்திரங்களின் உதவியோடு 17 நாட்களுக்குப் பிறகு, 41 தொழிலாளர்களும் மீட்கப்பட்டனர். விபத்துக்குள்ளான அந்த சுரங்கப்பாதையை அமைத்ததும் இந்த நவயுகா நிறுவனம்தான். இதுபோல நாடு முழுவதும் பல முக்கியமான நெடுஞ்சாலைகள், பாலங்கள் அமைக்கும் திட்டங்களின் ஒப்பந்தங்கள் இந்நிறுவனத்திற்கு கிடைத்திருக்கிறது.

எனவே பாஜக பெற்ற தேர்தல் பத்திர நன்கொடைகள் குறித்து உரிய விசராணை நடத்தப்பட வேண்டியது அவசியமான ஒன்று

# கோவை, சேலம், சென்னை வேட்பாளர்களுக்கு நேரில் வாழ்த்து!



**ஈரோடு :** இந்தியா கூட்டணியின் ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் கே.இ.பிரகாஷ் 22.03.2024 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணியை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



**கோவை :** எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணியின் சார்பில் கோவை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கணபதி ராஜ்குமாரை 26.03.2024 அன்று கோவை மாநகர மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்தித்து தங்களது ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

கோவை மாவட்டக் கழகச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாவட்ட அமைப்பாளர் புரட்சித் தமிழன், மாநகரத் தலைவர் நிர்மல் குமார், மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன், மாதவன், சதீஷ், பொங்கலூர் கார்த்தி, வழக்கறிஞர் சரவணன் ஆகியோர் பங்கேற்றனர்.




**சேலம் :** சேலம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் டி.எம். செல்வகணபதியை 27.03.2024 அன்று சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் தலைமையில் கழகத் தோழர்கள் நேரில் சந்தித்து தங்களது ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர். தான் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பணிகளை தொடர்ந்து கவனித்து வருவதாகவும், உங்களது பணிகள் மிகச்சிறப்பாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உடன் நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் (கி) மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை, சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், இளம்பிள்ளை நகர தலைவர் ரமேஷ், கோபி, அசோக், மூலப்பாதை கவியரசு, கே.ஆர்.தோப்பூர் அஜித்குமார், அருள்பாண்டியன், நங்கவள்ளி நகர செயலாளர் பிரபாகரன் ஆகியோர்.



**சென்னை :** எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு மத்திய சென்னை மக்களவைத்தொகுதி தேர்தல் பணிமனையை திறந்து வைக்க வருகை புரிந்த திமுக வேட்பாளர் தயாநிதி மாறனை 27.03.2024 அன்று சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி சந்தித்து வாழ்த்து தெரிவித்து கழக வெளியீடுகளை வழங்கினார்.

# பெரியாரை தாக்குவதா? முதலமைச்சர் கண்டனம்!



சிறந்த பாடகர் டி.எம்.கிருஷ்ணா அவர்கள் The Music Academy-ன் ‘சங்கீத கலாநிதி’ விருதுக்குத் தேர்வாகி இருப்பதற்கு எனது அன்பான வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கிருஷ்ணா அவர்கள் கொண்டுள்ள முற்போக்கு அரசியல் நிலைப்பாடுகளினாலும், அவர் எளியோரைப் பற்றித் தொடர்ந்து பேசி வருவதாலும் ஒரு தரப்பார் காழ்ப்புணர்விலும் உள்நோக்கத்துடனும் விமர்சிப்பது வருத்தத்துக்குரியது.

இதில் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட மானுட சமத்துவத்துக்காகவும் பெண்கள் சரிநகர் சமானமாக வாழ்ந்திடவும் முக்கால் நூற்றாண்டு காலம் அறவழியில், அமைதிவழியில் போராடிய தந்தை பெரியாரைத் தேவையின்றி வசைபாடுவது நியாயமல்ல. பெரியாரின் தன்னலமற்ற வாழ்க்கை வரலாற்றையும், அவரது சிந்தனைகளையும் படிக்கும் எவரும் இப்படி அவதூறு சேற்றை வீச முற்பட மாட்டார்கள்.

திரு கிருஷ்ணா அவர்கள் இசைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புகளுக்கு உரிய மரியாதையையும் அங்கீகாரத்தையும் வழங்கிடும் வகையில் தகுதியானவரைத் தேர்ந்தெடுத்த மியூசிக் அகாடெமி நிர்வாகிகள் நம் பாராட்டுக்கு உரியவர்கள்.

டி.எம்.கிருஷ்ணா எனும் கலைஞனின் திறமை எவராலும் மறுதலிக்க முடியாதது. அரசியலில் மத நம்பிக்கைகளைக் கலந்தது போல, இசையிலும் குறுகிய அரசியலைக் கலக்க வேண்டாம்! விரிந்த மானுடப் பார்வையும், வெறுப்பை விலக்கி, சக மனிதரை அரவணைக்கும் பண்புமே இன்றைய தேவை!


## மணமகள் தேவை

பெயர் : கார்த்திகேயன்

வயது : 40

கல்வித் தகுதி : எம்.எஸ்.சி

பணி : வெளிநாட்டில் தனியார் டெக்ஸ்டைல் நிறுவனம்
(ஆண்டு வருமானம் ரூ.24-30 லட்சம்)

தொடர்புக்கு : 98416 53200


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted March 30, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran